# பெய்ஜிங்கில் நடந்த மூன்றாம் இந்திய சீன மூலோபாய பொருளாதார உரையாடல் கூட்டம்

மார்ச் 18,2014

இந்திய சீன மூலோபாய பொருளாதார உரையாடலின் மூன்றாவது சுற்று இன்று பெய்ஜிங்கில் நடைபெற்றது. இந்த உரையாடலை டாக்டர் மான்டேக் சிங் அலுவாலியா, துணை தலைவர், இந்திய திட்ட குழு மற்றும் திரு ஷு ஷௌஷி, தலைவர், தேசிய அபிவிருத்தி மற்றும் சீனாவின் சீர்திருத்த ஆணையம் ஆகியோர் இணைதலைமை வகித்தனர். இதில் இந்தியா மற்றும் சீனாவின் மூத்த அதிகாரிகள் பங்கு கொண்டார்கள்.

ஒட்டுமொத்த பொருளாதார கொள்கையை கடைபிடித்து ஒருங்கிணைப்பு அதிகரிக்கும் மற்றும் பிரச்சினைகள் மற்றும் சவால்களை எதிர்கொள்ள ஒன்று சேர, இருதரப்பு வர்த்தகம், முதலீடு, மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பிராந்திய, உலக பொருளாதார நிலைமை குறித்து இருதரப்பு பிரதிநிதிகள் விரிவான மற்றும் ஆழமான விவாதங்களை நடத்தினர்.ரயில்வே உள்கட்டமைப்பு, தகவல் தொழில்நுட்பம், எரிசக்தி, மற்றும் நிதி போன்ற துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு வலியுறுத்தப்பட்டது. இரண்டு பக்கங்களும் ஐக்கிய நாடுகள், குழு 20 மற்றும் பிரிக் போன்ற பன்னாட்டு கட்டமைப்புகளில் இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் ஆழ்ந்த ஈடுபாடு தொடர வேண்டும் என்று ஒப்புக்கொண்டுள்ளன.

ரயில்வே கீழ் இரு பெருந்தூர பயணம், ரயில் நிலையம் அபிவிருத்தி மற்றும் இந்தியாவில் இருக்கும் ரயில்களின் வேகத்தை அதிகரிப்பது போன்ற குறிப்பிட்ட பகுதிகளில் ஒத்துழைப்பு ஏற்பாடுகளை தொடர ஒப்புக் கொண்டனர். இது சம்பந்தமாக அமலாக்கும் நடைமுறைகளை வெளிப்படுத்த முதன்மை முகவர்கள் நியமிக்கபட்டுள்ளன.

இந்திய தொழில் மற்றும் தொழிற்துறை பகுதிகளில் சீன நிறுவனங்கள் முதலீடு செய்ய மூலோபாய பொருளாதார உரையாடல் (எஸ்.ஈ.டி) கீழ் ஒரு பணிக்குழுவை அமைக்க இரு தரப்பும் முடிவு செய்துள்ளது.

(i) நிலையான நகரமயமாக்கம் மற்றும் (ii) தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம் ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பேச்சுவார்த்தையின்போது கையெழுத்திடப்பட்டன. அடுத்த உரையாடல் சுற்றுக்கு முன் முடிக்கப்பட இருக்கும் நிலையான நகரமயமாக்கல் மற்றும் ஆற்றல் திட்டம் தொடர்பான கூட்டு ஆய்வுகளின் செயல் திட்டங்கள் இதில் கையெழுத்திடப்பட்டன.

டாக்டர் மான்டேக் சிங் அலுவாலியா, பெய்ஜிங்கில் நாளை பிரதமர் லி கெக்கியாங் அவர்களை சந்திப்பார். இவருக்கு மேலும் சீன நிதி அமைச்சரவையில் உள்ள தனது சகாக்கள்,அரசுக்கு சொந்தமான சொத்துக்கள் தலைமை தேர்தல் ஆணையர், மற்றும் சீன அபிவிருத்தி வங்கியின் தலைவர் ஆகியோருடன் இருதரப்பு கூட்டங்கள் உள்ளன.

மூலோபாய பொருளாதார உரையாடல் (எஸ்.ஈ.டி) முதல் இரண்டு சுற்றுகள் முறையே செப்டம்பர் 2011ல் பெய்ஜிங்கில்மற்றும் செப்டெம்பர் 2012இல் புது தில்லியில் நடைபெற்றது. நான்காவது சுற்று அடுத்த ஆண்டு இந்தியாவில் நடைபெற இருக்கிறது.

பெய்ஜிங்
மார்ச் 18,2014